பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

தே.செ.வெ.எண்.04 நாள் : 28.11.2017

**இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள எண்.11, டாக்டர்.இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற இடைத்தேர்தலையொட்டி வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான முதற்கட்ட பயிற்சி வகுப்பு நடைபெற உள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

எண்.11, டாக்டர்.இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதிக்கு 21.12.2017 அன்று இடைத்தேர்தல் நடைபெறுவதையொட்டி, வாக்குப்பதிவின் போது வாக்குச்சாவடியில் பணியாற்றவுள்ள மத்திய, மாநில அரசு அலுவலர்களுக்கான முதற்கட்ட பயிற்சி வகுப்பு (30.11.2017) அன்று காலை 9.00 மணி முதல் வண்ணாரப்பேட்டை, காமராஜர் சாலை அருகிலுள்ள உள்ள அரசு தொழிற்பயிற்சி கல்லூரியில் (கருமாரியம்மன் கோயில் அருகில், சாய்பாபா கோயில் பின்புறம்) நடைபெற உள்ளது.

வாக்குப்பதிவின்போது 50 மையங்களில் உள்ள 256 வாக்குச்சாவடிகளில் பணியாற்றக்கூடிய வாக்குச்சாவடி தலைமை அலுவலர்களாக 307 அலுவலர்கள், வாக்குச்சாவடி அலுவலர்–1 நிலையில் 307 அலுவலர்கள், வாக்குச்சாவடி அலுவலர்–2 நிலையில் 307 அலுவலர்கள், வாக்குச்சாவடி அலுவலர்–3 நிலையில் 307 அலுவலர்கள் மற்றும் 1400 வாக்காளர்களுக்கு மேலுள்ள வாக்குச்சாவடிகளுக்கு வாக்குச்சாவடி அலுவலர்–4 நிலையில் 103 அலுவலர்கள், வாக்கு ஒப்புகைச் சீட்டு வழங்கும் அலுவலர்களாக 307 அலுவலர்கள் என மொத்தம் 1638 மத்திய, மாநில அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தேர்தல் நடத்தும் விதம் குறித்தும், வாக்குப்பதிவு இயந்திரம், கட்டுப்பாட்டு கருவி, வாக்காளர்களுக்கு அடையாள மை வைப்பது போன்ற பணிகள் குறித்த பயிற்சி வகுப்புகள் நான்கு கட்டங்களாக நடைபெற உள்ளது. அதனடிப்படையில் முதற்கட்ட பயிற்சி வகுப்பு 30.11.2017 அன்றும், இரண்டாம் கட்ட முதற்பயிற்சி வகுப்பு 08.12.2017 அன்றும் இரண்டாம் கட்ட இரண்டாம் பயிற்சி வகுப்பு (2nd Class Training Repeat) 16.12.2017 அன்றும், மூன்றாம் கட்ட பயிற்சி வகுப்பு 20.12.2017 அன்றும் நடைபெற உள்ளது.

வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கையின் போது பணியாற்றக்கூடிய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பணியின் விவரம் மற்றும் பணியின் நாள் குறித்த அழைப்பு ஆணை கடிதம் மூலமாகவும் மற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் கைபேசிகளுக்கு குறுஞ்செய்தி (SMS) வாயிலாகவும் தகவல் தெரிவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேர்தல் பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி பயிற்சி வகுப்பில் அலுவலர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். கலந்து கொள்ளாதவர்கள் மீது மக்கள் பிரநிதித்துவ சட்டத்தின் பிரகாரம் (Representation of People Act) நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**